பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 19 மார்கழி 20 மகரம் 23 இதழ் 325
யாழ்ப்பாணம் புதன்கிழமை 4-1-78




## 'கார்ட்டர் புரி'

புதுடில்லி, ஜன 3
புதுடில்லியில், அமெரிக்க அதிபரும், இந்தியப் பிரதமரும் இன்று கூட்டறிக்கை வெளியிட முன்னர், புதுடில்லி அருகே ஒரு கிராமத்துக்குச் சென்று அந்தக் கிராம வாசிகளுடன் 75 நிமிட நேரம் வரை அமெரிக்க அதிபர் உரையாடினார்.
இக்கிராமத்திற்குக் 'கார்ட்டர் புரி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு 'கரன்ஸி' கணக்கு:

# இங்கு ஆரம்பிக்க அனுமதி!

## நிதியமைச்சர் 'ரெனி' வழங்கும் புதிய சலுகை

### வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர் இங்கு எந்த வங்கியிலும் கணக்கு தொடங்கலாம்

(கொழும்பு)

**வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர், இலங்கையின் எந்த ஒரு வர்த்தக வங்கியிலும், வெளிநாட்டுக் கரன்ஸிக் கணக்குகளை இனிமேல் ஆரம்பிக்கலாம். இதற்கான அனுமதியை நிதியமைச்சர் திரு. ரெனி டி மெல் நேற்று வழங்கியுள்ளார்,**

இப்புதிய திட்டம் உடனடியாக அமுலுக்கு வருகிறதென்று நேற்று அறிவிக்கப்பட்டது.,

வெளிநாட்டில் வசிக்கும் அல்லது தற்காலிகமாகத்தங்கியிருக்கும் இலங்கையர், வெளிநாட்டு கரன்ஸிகளில் கணக்குகளை இங்கு ஆரம்பிப்பதானால் அதற்கு முன்அனுமதிபெற வேண்டும். இந்த முன் அனுமதி பெற்றாலும்கூட, இலங்கையில்; இலங்கைவங்கி அல்லது மக்கள் வங்கியில் மட்டுமே கணக்குகளை ஆரம்பிக்க முடியும்.

நிதிஅமைச்சரின் புதிய பணிப்புரையின்படி, வெளிநாட்டுக் கரன்ஸிக் கணக்குகளை இனிமேல் எந்தவிதக் கட்டுப்பாடுமின்றி, எந்தஒரு வர்த்தக வங்கியிலும் இங்கு ஆரம்பிக்கலாம்.

புதிய அறிவிப்பின்படி, எந்த ஒரு வெளிநாட்டைச் சேர்ந்த கரன்ஸியையும்(பணத்தையும்) இங்கு கொண்டுவர அனுமதி வழங்கப்படும் என்றும், இப்பணம் ஸ்டேர்லிங்பவுண் அல்லது அமெரிக்க டொலரில் மாற்றப்பட்டு இங்கு கணக்கில் வரவுவைக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

வெளிநாட்டில் வதியும் இலங்கையர், இங்குள்ள எந்தஒரு வர்த்தக வங்கியிலும் வெளிநாட்டு கரன்ஸிக் கணக்கை ஆரம்பிக்கும்நோக்குடன் வெளிநாட்டு கரன்ஸிகளைக் கொண்டுவருவதற்கு நாணய மாற்றுக் கட்டுப்பாட்டு அதிகாரியின் அனுமதி பெறத் தேவையில்லை. அதே நேரத்தில் இங்கு' பணத்தை எந்த விதக் கட்டுப்பாடுமில்லாமல் தேவைப்படும் நேரத்தில் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

வெளிநாட்டுக் கரன்ஸிகளில் கணக்கை இங்கு [எந்த ஒரு

(6ம் பக்கம் பார்க்க)

## வானில் தோன்றிய அதிசய ஒளி!

(யாழ்ப்பாணம்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு, 7-00 மணியளவில் வானின் மேற்குத் திசையில் அதிசய ஒளி ஒன்று காணப்பட்டது.

முட்டை வடிவிலான இந்தச் சிவப்பு நிற ஒளி வானில் முப்பது நிமிடம் வரை காணப்பட்டது.

காங்கேசன்துறையில் பெருந்திரளான மக்கள் இந்த அதிசய ஒளியைக் கண்டு வியப்புற்றனர்.

இதே தினம் இரவு இந்த ஒளியை மன்னார் மக்களும் கண்டதாக நமது மன்னார் நிருபர் அறிவிக்கின்றார். (உ)

## சிங்களத் தேர்ச்சிபெற அவகாசம் வழங்கப்பட்டது

(வல்வெட்டித்துறை)

சிங்களத்தேர்ச்சியின்மை காரணமாகத் பதவிநீக்க அறிவித்தல் வழங்கப்பட்ட விவசாயவிஸ்தரிப்பு சேவையாளர்கள் சிங்களத்தேர்ச்சி பெறுவதற்கு அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. அடுத்தமாத இறுதிவரை இவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

சிங்களத்தேர்ச்சி இன்மைக்காக வேலை நீக்க அறிவித்தல் வழங்கப்பட்டவர்களில் பலரும் 15 முதல் 20 வருடங்கள் வரை சேவையாற்றி இருப்பது குறிப்பிடத்தக்கது. [அ]

# காங்கிரஸிலிருந்து இந்திரா நீக்கப்பட்டார்!

## காங். காரியக்கமிட்டி நடவடிக்கை

புதுடில்லி, ஜன.3

**திருமதி இந்திரா காந்தியும் அவரது ஆதரவாளர்களும் காங்கிரஸ் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.**

இந்த நடவடிக்கையை காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. பிரமானந்தரெட்டி மேற்கொண்டுள்ளார்.

காங்கிரஸ் காரியக்கமிட்டியின் கூட்டம், புதுடில்லியில் அவசரமாகக் கூட்டப்பட்டதென்றும், கட்சியிலிருந்து அவர்களை நீக்கும் உத்தரவை காரியக்கமிட்டிதான் முடிவு செய்தது என்றும் திரு. பிரமானந்தரெட்டி இன்று நிருபர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

திருமதி இந்திராகாந்தியும், அவரது மகாநாட்டில் கலந்து கொண்ட அத்தனைபேரும் காங்கிரஸ்கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்த திரு. ரெட்டி மேலும் கூறுகையில்;

'பாரத தேசிய காங்கிரஸின் தலைவராக திருமதி இந்திரா காந்தி தெரிவுசெய்யப்பட்டதாக அகில இந்திய வானொலிச் செய்திமூலம் அறிந்தேன். இது சட்டவிரோதமானது. பாரத தேசிய காங்கிரஸின் தலைவராக் நான்தான் இருக்கின்றேன். இதுபற்றி தலைமைத் தேர்தல் கமிஷனருக்கும் அறிவித்துள்ளேன். கடந்த காலத்தில் காங்கிரஸ் பிளவுபட்டிருந்தபோது, திருமதி இந்திரா காந்தி தனது கட்சியின் சின்னமாகப் பசுவைத் தெரிவுசெய்திருந்த விஷயத்தையும் தேர்தல் கமிஷனருக்கு அறிவித்துள்ளேன். பாரத தேசியக் காங்கிரஸின் தலைவர் நான் என்ற முறையில் இதனை அவருக்கு அறிவித்துவ்ளேன்'' என்று திரு. ரெட்டி நிருபர்களுக்கு விளக்கிக் கூறினார்.

### கார்ட்டர்-மொரார்ஜி கூட்டறிக்கை:

# 'அணுஆயுதங்கள் ஒழியவேண்டும்'

புதுடில்லி, ஜன. 3

மனிதகுல மேம்பாட்டிற்காக அணு ஆயுதங்கள் முற்றாக ஒழிக்கப்படவேண்டும் என்று அமெரிக்க அதிபர் ஜிம்மி கார்ட்டரும் பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயும் இன்று வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவுக்கு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்ட அமெரிக்க அதிபர் கார்ட்டர், இன்று புதுடில்லியில் இந்தியப் பிரதம

(6-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

வவுனியா வடக்கு பட்டிகுடியிருப்பில் நல்ல வியாபாரம் நடத்தக்கூடிய கடையுடன் ஒரு ஏக்கர் காணி உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: மு. க. சுல்தான் முமீனு கொட்டேச், டச்சுவீதி, சாவகச்சேரி. 8084

நல்லூர் கந்தசுவாமிகோவிலுக் கருகாமையில் முத்திரைச் சந்தையடி பருத்தித்துறைவீதியில் வீடுகட்ட அல்லது தொழிற்சாலை அமைக்கக்கூடிய ஒன்றரைப்பரப்புக்காணி கற்கட்டுக் கிணற்றுடன் உடனடி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு, கு. சோமசுந்தரம், 386, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். அல்லது க. இராமநாதன், 11, நாயன்மார்வீதி, நல்லூர். 8047

## தேவை

மனைஇயல் பட்டதாரி ஆசிரியை ஒருவர் தேவை. உரிய தராதர விபரங்களுடன் 7-1-78 திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். அதிபர், மகளிர் கல்லூரி பண்டத்தரிப்பு. 8087

சேவிஸ் ஸ்ரேசனில் வேலை செய்து அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. திறமைக்கேற்பசம்பளம் வழங்கப்படும். நேரில் சமுகமளிக்கவும்- லிங்கோ லுப்பிறிக்கேசன் சேவிஸ், பலாலிறோட், கோண்டாவில். 8088

யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான தியேட்டருக்கு உதவி மனேஜர், ஒப்பறேட்டர், புக்கிங்கிளார்க், செக்கர், Cashier, ஒப்பறேட்டர் வேலை பழகுவோர் தேவை. பிணைப்பணம் கட்டக்கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். தியேட்டர் அனுபவம் முக்கியமாகக் கவனிக்கப்படும். முடிவு திகதி 12-1-78. விளம்பரஇல. 8091 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 8091

எமது உற்பத்திப் பொருட்களை வீடுவீடாக விளம்பரப்படுத்தி விற்பனை செய்வதற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. சம்பளமும், கமிஷனும்தரப்படும். போக்குவரத்து வசதியும், தங்கும் வசதியும் உண்டு. சிவா இன்டஸ்றீஸ், நவாலிவீதி, ஆனைக்கோட்டை. 8095

## பயிற்சி

மூன்று மாதகால பொது விவசாய பயிற்சி இளைஞர்கட்கும், யுவதிகட்கும், 1-2-78 ஆரம்பமாகும் ஊதியம் வேதன அடிப்படையில், ஜனவரி இறுதி வாரத்தில் நேரடியாக விண்ணப்பிக்கவும். அதிபர், யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம், மருதனமடம் 8061

## அறிவித்தல்

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தில் 10000 வெற்றுச்சாக்குகளும், 41 அந்தர் கழிவுமாவும் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்குண்டு. ரூபா 250/- தலைமைக் காரியாலயத்தில் செலுத்தி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும். கேள்விப்பத்திரம் 78-1-9ம் திகதி திங்கட்கிழமை பி.பகல் 2-30 மணிக்குமுன்னர் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். தபால் உறையின் இடது பக்கத்தில் சாக்கு, கழிவுமா கேள்விப் பத்திரம் எனக் குறிப்பிடப்படல் வேண்டும்; கேள்விப் பத்திரங்கள் 9-1-78ம் திகதிமாலை 4 மணிக்கு சங்க உபசபையினரின் முன்னிலையில் திறக்கப்படும்.

பொதுமுகாமையாளர்
8092

# பெண்ணைத் தாக்கியதாக ஆசிரியர்மீது குற்றச்சாட்டு

[மாவிட்டபுரம்]

மூன்றுமாதக் கர்ப்பிணி ஒருவரைத்தாக்கிக் காயம் விளைவித்ததாக மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட ஆசிரியர் ஒருவர் ஒரு தினம் றிமாண்டில் வைக்கப்பட்டு பின்னர் 1000 ரூபா உறுதிப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

உடுவிலைச் சேர்ந்த இவ்வாசிரியர் அதே இடத்தைச் சேர்ந்த தமது ஒன்றுவிட்ட சகோதரியான 3மாதக் கர்ப்பிணிப்பெண்ணை தாக்கி காயம் விளைவித்தாக சுன்னாகம் பொலிசாரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட சமயம் அவரை ஒருதினம் றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்ட நீதிபதி திரு.டி.யேசுரத்தினம் பின்னர் 1000ரூபா உறுதிப் பிணையில் செல்ல அனுமதித்தார். இம்மாதம் 10ம்திகதி இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும்.

## மகஜர்

(வண்ணார்பண்ணை)

தீவுப்பகுதிக்கு இரண்டு விவசாயப் போதனாசிரியர்களை நியமிக்குமாறும், வேலணைப் பிரிவுக்கு இரண்டு விவசாய விரிவாக்கச் சேவையாளர்களை நியமிக்குமாறும் கோரும் மகஜரொன்றை மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கம் விவசாய அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ளது.

நெடுந்தீவு முதல் மண்டைதீவு வரையுள்ள பத்துக்கும் அதிகமான கிராமங்களுக்கு இதுகால வரை ஒரு விவசாயப் போதனாசிரியரே இயங்கி வருவதாகவும், இதனால் பல ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு நஷ்டமும் பாதிப்பும் இருந்துவருவதாகவும், தனி ஒரு போதனாசிரியரே இப்பகுதியில் கடமையாற்றுவது சிரமமாக இருக்கிறதென்றும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## அடைவுநகை ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் திருநெல்வேலி 180, சேர். பொன் இராமநாதன்வீதி, திரு&திருமதி தா. சி. குமாரசாமிஅவர்களிடம் 01-07-1976திகதிக்கு முன் அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் 21-01-1978 சனிக்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்துப் பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

சி. மகாதேவன்,
ஏலவிற்பனவாளர்.
643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 8043

## விளம்பரம்

பிரபல வர்த்தக ஸ்தாபனத்தில் கீழ்க்காணும் வெற்றிடங்களுள. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

மனேஜர்: 2. தையல் மெசின் ஸ்தாபனம் பண்டத்தரிப்பு—அச்சுவேலி.
1. அரிசி ஆலை
சம்பளம்: ரூபா. 400/-
பிணைப்பணம்: 5000/-
தராதரம்: க.பொ.த. (சாதாரணம்)
அனுபவம் தேவை.

உதவி மனேஜர்: தையல்மெஷின் ஸ்தாபனம் பண்டத்தரிப்பு — அச்சுவேலி.
சம்பளம்: ரூபா 240/-
பிணைப்பணம்: 3000/-
தராதரம்: க.பொ.த. (சாதாரணம்)
அனுபவம் தேவை.

களஞ்சியப் பொறுப்பாளர்: சம்பளம்: ரூபா 400/-
பிணைப்பணம்: 5000/-
தராதரம்: க.பொ.த. (சாதாரணம்)
அனுபவம் தேவை.

9-1-78 வரை விண்ணப்பிக்கலாம்.

விளம்பர இல: 8093,
மே/பா: ஈழநாடு,
த. பெ. இல. 49,
யாழ்ப்பாணம். 8093

# "கிறீஸ்தவ மதம் தரும் நிறைவும், சாந்தியும்" 'அமிர்' சொல்கிறார்

[பண்டத்தரிப்பு]

"யேசுநாதர் இவ்வுலகில் அவதரித்து மக்கள் வாழ்வில் புதியதொரு நம்பிக்கையையும், புதியதோர் சகாப்தத்தையும் ஏற்படுத்தினர் இன்று உலகில் வாழும்பெரும்பான்மையான மக்கள் கிறிஸ்தவமதத்தைப் பின்பற்றி சாந்தியும், நிறைவும் பெற்று வருகின்றனர்.

மகாத்மாகாந்தியும் யேசுநாதரின் வாழ்க்கையைப் பின்பற்றி வாழ்ந்தவர் பிரச்னைகளை அன்புவழியில் சமாதானமாக தீர்க்க யேசுநாதர், காந்தியடிகள் ஆகியோர் காட்டிய வழியை உலகம் பின்பற்றினால் நிரந்தர சமாதானமும் சுபிட்ஷமும் ஏற்படும் என்பதில் ஐயமில்லை."

இவ்வாறு நத்தார் தின விழாவையொட்டி மாதகல் புனித அந்தோனியார் ஆலய கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட ஒளிவிழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசன்துறை எம்பியுமான திரு.அ.அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் திரு. அன்ரன் நொயல் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அந்தோனியார் தேவாலய குருவானவர் அருட்திரு. ஜஸ்ரின் அடிகளாரும் உரையாற்றினர் கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் வழங்கினார் இறுதியில் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன (உ)

## மீனவர்குறை தீர்ப்பதாக அமிர் உறுதி

[மாவிட்டபுரம்]

பலாலி வடக்கு மீனவர்களின் முறைபாட்டைத் தொடர்ந்து அவர்கள் தொழில்செய்யும் இடத்தை நேரில் சென்று பார்வையிட்ட காங்கேசன்துறைத் தொகுதி பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் இது குறித்து விரைவில் ஒழுங்குகள் செய்துதருவதாக உறுதியளித்துள்ளார்.

மேற்படி மீனவர்கள் தமது தொழிலுக்கு உபயோகப்படுத்தும் பல்வேறு உபகரணங்களையும், தொழில் இல்லாத சமயங்களில் தமது வள்ளங்களையும் வைத்திருக்கும் கடற்கரையை அண்மித்த பகுதியிலுள்ள காணியை பலாலி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்காக சுவீகரித்ததையடுத்து மீனவர்கள் திரு. அ. அமிர்தலிங்கத்திடம் முறைப்பாடு செய்தனர்.

அவர் அங்கு நேரில் சென்று பார்வையிட்டு இதுகுறித்து விரைவில் ஒழுங்குகள் செய்து தருவதாக உறுதியளித்துள்ளார். [அ]

# யாழ். லயன்ஸ் கழக உதைபந்தாட்டப் போட்டி

## கண்டுகளிக்குமாறு தூதரகங்களுக்கு அழைப்பு

[யாழ்ப்பாணம்]

அடுத்தவாரம் யாழ். நகரில் நடைபெறும் யாழ். லயன்ஸ் கழக உதை பந்தாட்டப் போட்டி இப்போதே உதைபந்தாட்ட ரசிகர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை விளையாட்டுத் துறை வரலாற்றில் இலங்கையிலுள்ள பல கழகங்கள் போட்டியில் கலந்துகொள்வது முதல் தடவையாகும்.

12ம் திகதி இரு போட்டிகளில் பொலிஸ் தெரிவுக் கோஷ்டியும், திருகோணமலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதும். பாஷையூர் விளையாட்டுக் கழகமும், கொழும்பு விக்ரறி கழகமும் மோதும்.

13ம் திகதி நடைபெறும் போட்டிகளில் குருநகர் பாடும் மீன் கழகமும், கொழும்பு சவுண்டேர்ஸ்ஸும் மோதுகின்றன. அடுத்து கொழும்பு ரட்ணம் கழகமும், மட்டக்களப்பு புத்… தெரிவுக் கோஷ்டியும் மோதுகின்றன.

14, 15ந் திகதிகளில் இவைகளில் வெற்றி பெற்ற கழகங்கள் மோதுகின்றன.

விளையாட்டு வீரர்கள் 11, 12ந் திகதிகளில் யாழ். நகர் வருவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. இவர்களுக்கான தங்குமிட வசதிகளை, யாழ். உதைபந்தாட்டக் கழகச் செயலாளர் திரு. ஈ. கே. ஆம்ரையா ஒழுங்கு செய்துள்ளார்.

இப்போட்டியைக் கண்டு ரசிப்பதுடன், யாழ். நகரின் வனப்பையும் கண்டு களித்துச் செல்லுமாறு, சகல தூதரகங்களுக்கும் யாழ். லயன்ஸ் கழகம் அழைப்பு அனுப்பியுள்ளது. [கெ-அ]

# ரயில் மிதிப்பலகை பிரயாணம்: நால்வரின் உயிரைக் குடித்தது

[கொழும்பு]

ரயில் மிதிபலகையில் நின்று பிரயாணம் செய்த நான்கு வாலியர்கள் எதிரே வந்த ரயிலுக்குப் பலியானார்கள்.

இச்சம்பவம் கல்கிசையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கொழும்பு நோக்கி வந்துகொண்டிருந்த ரயிலின் மிதிபலகையில் இறந்த இளைஞர்கள் நால்வரும் பிரயாணம் செய்துகொண்டிருந்தனர் என்றும் அப்போது எதிரேவந்துகொண்டிருந்த ரயிலின் திறந்திருந்த கதவினால் இவர்கள் மோதப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மூவர் ஸ்தலத்திலும் ஒருவர் ஆஸ்பத்திரியிலும் மரணமானார்கள். [இ

# இலங்கைக்கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் கைது

(கொழும்பு)

இலங்கைக் கடல் எல்லைக்குள் மீன் பிடித்த இந்திய மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்குமிடையில், நடுக்கடலில் ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

ராமேஸ்வரத்திலிருந்து இழுவைக் கப்பலில் வந்த மீனவர்களுக்கும் பேசாலையிலிருந்து சென்ற மீனவர்களுக்குமிடையில் ஏற்பட்ட மோதலில், ராமேஸ்வரம் மீனவர்கள் 500 ருத்தல் மீனையும், 125 ருத்தல் றாலையும் இழந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இம்மோதலில் இந்திய மீனவரின் கப்பல் பழுதானதைத் தொடர்ந்து, பேசாலையிலிருந்து சென்ற மற்றொரு கப்பல், அதனைக் கரை சேர்த்தது.

மன்னார்ப் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள், பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில், பேசாலை மீனவர்களால் தாங்கள் தாக்கப்பட்டதாகவும், தங்கள் மீன்கள் வழிப்பறி செய்யப்பட்டதாகவும் புகார் செய்துள்ளனர்.

சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் என்ற ரீதியில் கைதான இந்திய மீனவர்களை, பொலிசார் சட்டவிரோத குடியேற்றப்பகுதி இலாகாவிடம் ஒப்படைத்துள்ளனர். [க-அ]

## 20 பேரை சிபார்சு செய்யலாம்

[யாழ்ப்பாணம்]

"ஒவ்வொரு தமிழ் எம். பி. யும் ஆசிரிய நியமனங்களுக்கு 20 பேரைச் சிபார்சுசெய்யலாம். கல்வியமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்தின தமிழ் எம். பி.க்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் ஆசிரியர் நியமனத்திற்கு ஒவ்வொரு எம். பி.யும் 20 பேரைச் சிபார்சு செய்யுமாறு கோரியுள்ளார்.

ஆகக்கூடிய புள்ளிகளாக 400 உள்ளவர்களுக்குப் பாரபட்சம் இல்லாமல் சிபார்சு வழங்குவோம்" என்று ஊர்காவற்றுறை எம் பி நமது நிருபரிடம் தெரிவித்தார். [கெ-அ]

## பிரிவுபசாரம்

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சுகாதார வைத்தியஅதிகாரியாக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் திரு. எஸ். புவிராஜசிங்கத்திற்கு தெல்லிப்பழை பாலர் ஞானோதயா சபையினர் பிரிவுபசாரவிழாவொன்றை நடத்தினர்.

தெல்லிப்பழை காசிவிநாயகர் தேஸ்தான மண்டபத்தில் சபைத்தலைவர் பிரமஸ்ரீ சி. கணேசலிங்கக் குருக்கள் தலைமையில் நடந்த இவ்விழாவில் திரு. புவிராஜசிங்கத்தின், குண நலன்களைப் பற்றியும் அவரது சிறந்த சேவைகளைப்பற்றியும் பலரது பாராட்டுரைகள் இடம்பெற்றன. [அ]

ஈழநாடு
The Eelanaadu

# "அமிர் காலத்தில் தமிழினம் விடுதலை பெறுவது உறுதி"

## வட்டுக்கோட்டை எம். பி. கூறுகிறார்

[சுழிபுரம்]

''எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒரு பக்கம் பேச்சு; மறுபக்கம் பாராட்டாக இருந்தாலும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு முழு நேரத் தலைவராகக் கடமையாற்ற எமது தலைவர் அமிர்தலிங்கம் இடைத்ததையிட்டு நாம் பெருமை அடைகின்றோம். சென்ற காலங்களில் எமக்குப் பகுதி நேரத் தலைவர்களே கிடைத்தனர். முழு நேரப் பணியாளரான எமது தலைவர் அமிர் சகல குணநலங்களும் நிறையப் பெற்றவர். இவருடைய காலத்தில் இந்த நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் ஒரு விடுதலை பெற்ற இனமாக வாழ்வார்கள் என்பது உறுதி. ஒரு சிறந்த தலைவருக்குக்கீழ் நான் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது எனக்கு மிக்க பெருமையாகவுள்ளது.''

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு வழக்கம்பரை தமிழ் மன்றத்தினர் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்திற்கு அளித்த வரவேற்பு விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். இவ்வைபவம் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. மன்றத் தலைவர் திரு. ச. கந்தையா வரவேற்புரை நிகழ்த்தினார்.

கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை முன்னாள் அதிபர் திரு. சி. விசுவலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

''அண்மையில் நாட்டில் ஏற்பட்ட வன்செயல் சம்பவத்தின் போது எமது தலைவர் அமிர் ஓய்வு உறக்கம் இல்லாது செயல்பட்டதை நான் அறிவேன். மிகவும் துணிகரமாக, நடந்த சம்பவங்களை ஆட்சியாளர்களுக்கு விளக்குவதிலும் இன்னல் ஏற்பட்டவர்களுக்குத் தொண்டு செய்வதிலும் நடவடிக்கை எடுப்பதிலும் அவர் தீவிரமாக ஓய்வு உறக்கம் இல்லாது ஈடுபட்டிருந்தார்.''

சங்கானை கிராமசபையின் முன்னாள் தலைவர் திரு. ச. சம்பந்தமூர்த்தி பேசுகையில் பல காலத்தின்முன் செல்வா ஒன்றரை மணி நேரம் ஆங்கிலத்தில் பேசிய பேச்சை திரு அமிர்தலிங்கம் சிறப்பாக மொழிபெயர்த்தார் என்றும், இதைக்கொண்டு பிற்காலத்தில் அவர் ஒரு தலைவராக விளங்குவார் எனத் தாம் முடிவு செய்ததாகவும் கூறினார். பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய இளைப்பாறிய அதிபர் திரு. செ. ஸ்ரீநிவாசன உட்படப் பலர் பேசினர். [அ]

---

## ஆசிரியருக்குக் கடிதம்.

# தமிழ் அரச ஊழியரின் சிங்களத்தேர்ச்சித் தடை!

1956ம் ஆண்டுக்குப்பின் வேலைக்குச் சேர்ந்து சிங்கள மொழியில் 8ம் வகுப்பு சித்தி பெருத அரசஊழியர்கள் பலர் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் அநேகரும் குடும்பஸ்தர்களாவர்.

தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு சிங்கள மொழியில் தேர்ச்சியடையவில்லையென்று சம்பள உயர்வு இல்லை; வேலை நிரந்தரம் இல்லை, சில பகுதி ஊழியர்களுக்குப் பென்சன் இல்லை; முடிவு வேலை நீக்கம்.

இளமையில் பாடசாலையில் கற்றகல்விதான் நிலைத்து நிற்கும். 40-50 வயதிலும் ஒரு மொழியைப் படித்துச் சித்திபெற முடியுமா? வயது சென்றபின் அந்நிய பாஷையொன்றை இலகுவாகக் கற்று 8ம்வகுப்புச்சித்தியடைய முடியுமா? எத்தனையோ பிரச்னைகளுக்கும் மத்தியில் புதிதாக ஒரு மொழியைப் படித்துச் சித்திபெற முடியாது.

வடக்கு, கிழக்குப் பகுதியில் வேலை செய்யும்தமிழ் அரசாங்க ஊழியர்கள் அவசியம் ஏன் சிங்கள மொழியில் சித்திபெற வேண்டும்? அண்மையில் தமிழ் பிரதேசங்களிலுள்ள விவசாய உற்பத்தி மேறபார்வையாளர்களில் சிலரை அரசகருமமொழியான சிங்களத்தில் தேர்ச்சியடையவில்லையென்றுகாரணம் காட்டி வேலை நீக்க அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்அரசாங்க ஊழியர்கள் சிங்களத் தேர்ச்சியின்மையால் தமது வருடாந்த சம்பள உயர்வு, பதவி நிரந்தரம் என்பனவற்றை இழந்து ஈற்றில் தமது பதவியையும் இழந்து பரிதவிக்கும் நிலை கடந்த 1956ம் ஆண்டு தொடக்கம் ஏற்பட்டு வருகின்றது. ஒரு சிங்கள அரசாங்க ஊழியர் தமது தாய்மொழியில் கல்வி கற்று அதே மொழியில் அரசாங்க ஊழியராகச் சேர்ந்து எவ்வித கஷ்டமுமின்றி பதவி வகித்துவரும் நிலையில், தமிழ் ஊழியருக்கு அந்த உரிமையை வழங்காது பாகுபாடு காட்டப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் புதிய அரசாங்கம் இந்நாட்டில் தார்மீக சமுதாயத்தை அமைக்கப்போவதாகவும் தமிழ்மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் பிரச்னைகளைத் தீர்த்துவைக்கப்போவதாகவும் கூறிவருகின்றது. தமிழ் அரசாங்க ஊழியர்கள் பாதிக்கப்பட்டுவரும நிலைமையும், அரசின் புதியநடவடிக்கைகளினுல் சீர்திருந்துமா?

**கா. கந்தசாமி**
வீமன்காமம்,
தெல்லிப்பளை.

⁂

## பரீட்சை ஆணையாளர் கவனத்துக்கு!

வருடாவருடம் சித்திரை மாதம் நடைபெறும். க.பொ.த.உயர்தரப் பரீட்சையில், மனையியற் பாடம் எழுத்துப் பரீட்சை யாழ் நகரில் நடைபெற்றுவருகிறது. ஆனல் செய்முறைப்பரீட்சை கொழும்பு மாநகரில் சுற்றுப்புறங்களில் நடைபெறுகின்றது. மாணவிகள் ஒருதுணையுடன் செல்ல வேண்டும். எல்லாச்செலவுகளும் முன்னூறு ரூபாவுக்கு மேலாகின்றன. தங்குமிடங்களும் கிடைப்பதில்லை. சுயமரியாதையும் மறைந்து போகின்றது. சென்ற சித்திரையில் நடந்த பரீட்சைச் செய்முறைப்பரீட்சை ஆவணியில் இனக்கலவரநேரத்தில் நடந்தது. மாணவிகள் அல்லோல கல்லோலப்பட்டுத் தோற்றவில்லை. அதிகமானேருக்கு சித்தியில்லாப் பெறுபேறுகிடைத்தது. எனவே செய்முறைப் பரீட்சையை யாழ்நகரில் நடத்துமாறு மிகப்பணிவுடன் வேண்டுகிறோம்.

**துன்புறும் மாணவிகள் பெற்றோர்.**
வடமாநிலம் யாழ்நகர்.

---

## முடிவுதிகதிநீடிப்பு

(கொழும்பு)

ஆகஸ்ட் கலவரம்பற்றி விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷனுக்கு எழுத்துமூலமான முறையீடு செய்யும் காலம் மேலும், இரு வாரத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

முறையீடுகள் சமர்ப்பிக்கும் கடைசித்தினம் இம்மாதம் 2ம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (க-அ)

---

(5-ம் கலத் தொடர்ச்சி)

பாவம் யாராவது கண்டெடுத்தால்சேர்ப்பித்துவிடுங்கள்.

---

## இந்திய தேசிய காங்கிரஸ்

நாடு சுதந்திரம்பெற்றதுமே இந்திய தேசியக் காங்கிரஸைக் கலைத்துவிட வேண்டுமென்று காந்தி மகான் அப்போதே கூறியிருந்தார். அவரது யோசனையைக் கேட்டு அன்றே இந்தியத் தலைவர்கள் செயல்பட்டிருந்தால் இன்று காங்கிரஸ் சிதறுண்டுபோகவும் பிறரின் சிரிப்புக்கிடமாகவும் உள்ளாகியிருக்காது.

எந்தக் கட்சிகளுக்குள்ளும் கருத்துவேறுபாடு ஏற்படுவது இயற்கை. காந்திஜி உயிருடன் இருக்கையிலும் காங்கிரசுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. காந்திஜியின் மறைவின் பின்னரும் கருத்துவேறுபாடு ஏற்பட்டு பலதலைவர்கள் காங்கிரஸிலிருந்து விலகி ஒதுங்கியிருந்தனர்.

நேருவின் காலத்திலும் இதேபோன்று கருத்துவேறுபாடு ஏற்பட்டது. ஆச்சார்ய கிருபளானி போன்றவர்கள் வெளியேறினர். ராஜாஜியும் வெளியேறி புதிதாக சுதந்திராக்கட்சியை ஆரம்பித்தார்.

இதேசமயம் சோஷலிஸத் தலைவர்களான அசோக் மேத்தா, பட்டம் தாணுப்பிள்ளை ஆகியவர்களை நேரு காங்கிரசுக்குள் இழுத்துக் கொண்டார்.

இப்படிக் கருத்துவேறுபாடுகளால் காங்கிரஸில் இருந்து சிலர் வெளியேறுவதும் மற்றும் பல விடுதலை வீரர்கள் காங்கிரஸில் சேருவதுமாக இருந்ததேயொழிய பெரிய மோதல்கள் ஏற்பட்டுக் காங்கிரஸ் சிதறுண்டு போகும் நிலை ஏற்பட்டதில்லை.

திருமதி இந்திராகாந்தி பிரதமராகப் பதவியேற்றபின் மொரார்ஜியும் மற்றும் சிலரும் வெளியேறினர். காமராஜருக்கும் இந்திராவுக்குமிடையில் பெரும் வேறுபாடு ஏற்பட்டது.

முதுபெரும் தலைவர்கள் பலரும் காங்கிரஸிலிருந்து வெளியேறியபின் அனுபவக் குறைவானவர்களும் வேறு சொந்த நோக்கங்களைக் கொண்டவர்களும் இந்திராவின் செல்வாக்கைத் தமக்காக உபயோகிக்கத்தொடங்கினர். அதன் விளைவு காங்கிரஸ் ஆட்சிபீடத்திலிருந்தே அகற்றப்பட்டது.

இப்போது திருமதி இந்திராகாந்தி தனது ஆட்சிக்காலத்தில் நடந்த தவறுகளுக்குத் தாமே பொறுப்பு என்பதைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்.

எப்படியோ இந்திய தேசியகாங்கிரஸ் சிதறுண்டு போய்விட்டது.

இப்போ இந்திரா தலைமையில் ஒரு காங்கிரஸ் புதிதாக உதயமாகியிருக்கிறது.

உண்மையான காங்கிரசுக்குத் தாமே தலைவர் என்று திரு. பிரமானந்த ரெட்டி கூறுகிறார். புதுடில்லியில் இந்திரா கூட்டிய காங்கிரஸ் மாநாடு சட்ட விரோதமானது என்றும் குற்றம்சாட்டியிருக்கிறார்.

இந்திராவின் ஆதரவாளர்கள் கூட்டிய மாநாட்டுக்கு மூவாயிரம் பிரதிநிதிகள் சென்று கலந்துகொண்டிருக்கின்றனர்.

என்னதான் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டாலும் இந்திராவின் மதிப்பு இன்னும் காங்கிரஸில் ஒழிந்துபோகவில்லையென்பது இந்த மாநாட்டில் இருந்து தெரிகிறது.

ஆனாலும் ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பது போல் காங்கிரஸ் சிதறுண்டு போவது மற்றவர்களுக்கு இலாபம்தான்.

இந்திய தேசியகாங்கிரஸ் இந்தியாவுக்கு விடுதலை தேடிக்கொடுத்த, பெரும் தியாகங்கள் புரிந்த வரலாற்றுப்பெருமைமிக்க கட்சி.

காந்திஜி சொன்னது போல் சுதந்திரம்பெற்றதுமே அதைக் கலைத்திருந்தால் இன்று அதற்கு இந்த அவப்பெயர் நேர்ந்திராது.

இந்திய தேசியகாங்கிரஸுக்கு இன்று ஏற்பட்டுள்ள நிலை இலங்கை போன்ற ஜனநாயக நாடுகளிலுள்ள அரசியல்கட்சிகளுக்கும் அதன் தலைவர்களுக்கும் ஒரு படிப்பினையாக இருக்கவேண்டும்.

---

## மார்கழி உதயபூசை

(சுழிபுரம்)

வழக்கம்பரை மகாமாரியம்மன் கோயிலில் மார்கழி மாத உதயபூசை அதிகாலையில் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. நாதஸ்வர வித்துவான் என். நடராசா பாகவதர் கோஷ்டியினரின் மங்கள இசையுடன் பூசை ஆராதனைகள் நடைபெறுகின்றன. [இ]

......

## இலவசம்

[யாழ்ப்பாணம்]

தைப்பூச தினத்தன்று சமய தீட்சை வைக்கும் சபைகள், மன்றங்கள் ஆகியனவற்றிற்குச் சைவ அநுட்டான விதி எனும் நூலை யாழ்ப்பாணம் ''மில்க்வைத்'' ஸ்தாபனத்தார் இலவசமாக வழங்குகின்றார்கள். தேவையானோர் அவர்களோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [அ]

---

## மணிவாக்கு

நீதிமானுடைய வழி ராஜபாதைக்குச்சமானம்; சோம்பேறியின் வழியோ முள்வேலி.

— யேசுநாதர்.

---

## நாடும் நடப்பும்

சமீபத்தில் வவனியாவுக்குப் போயிருந்தேன்.

பகலும் இரவும் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள நகரம் அது பொழுது புலர்ந்ததுமே நகரம் சுறுசுறுப்படைந்துவிடுகிறது.

ஆனல் வவனியா பஸ் நிலையம் மிகமோசமாக பள்ளமும் திட்டியுமாகக்காடசிதருகிறது. மழை விழுந்ததும் பஸ்நிலையத்தில் ஒரு கணேற உருவாகிவிடுகிறது. இந்தப் பள்ளங்களில் விழுந்து நிமிர்ந்து பஸ்கள் வரும்போதும் புறப்படும்போதும், பஸ்ஸினுள் இருப்பவர்களும் பஸ் நிலயத்தில் நிற்பவர்களும் ஒருமுறை உயிரைக் கையில் பிடிக்கவேண்டியிருக்கிறது.

ஒரு சில வீதிகளைத் தவிர மற்றவை கால்வைக்கக் கூசும்!

நகரத்தில் சுத்தம் குறைவு.

சமீபத்திய கலவரத்தின் போது சில கடைகள் தீவைத்து நாசமாக்கப்பட்டன. இன்னும் அந்தக் கடைகள் அந்தப் பயங்கரச் சம்பவங்களை அந்த நகர மக்களுக்கு நினைவூட்டிக்கொண்டிருப்பதுமல்லாமல் வெளியிடங்களிலிருந்து வருபவர்களுக்கும் அந்தக் கதைகளை எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கின்றன.

வவனியா நகரம் துரிதமாக அபிவிருத்தி செய்யப்படவேண்டும். உள்ளூராட்சி அமைச்சு இதில் அதிக அக்கறை செலுத்துவது அவசியம்.

0 0 0

யாழ்ப்பாண நகரில் அழிந்துபோன கடைகளின் அடிச்சுவட்டையே இப்போது காண முடியவில்லை, புதிய கடைகள் எழுந்துவிட்டன, பழைய மார்க்கட் இருந்த இடத்தில் புதிய மார்க்கட் கட்டி முடிந்துகொண்டிருக்கிறது.

யாழ். மாநகரசபை ஆணையாளரின் சுறுசுறுப்புக்கு ஒரு சபாஷ்!

0 0 0

நடந்து முடிந்த 1977ம் ஆண்டில் இலங்கையில் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் வன்செயலால் மாண்டதாகப் பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுத்தேர்தலின் முன்பும் பின்பும் நடந்த சம்பவங்கள் போக சமீபத்திய இனக்கலவரத்திலும் பலர் மாண்டனர்.

இந்த வன்முறைச் செயல்களுக்கு கத்திதான் கூடுதலாகப் பாவிக்கப்பட்ட ஆயுதமாம். துப்பாக்கி, எறிகுண்டு, கோடரி, இரும்புக்கம்பி, உலக்கை ஆகியவைகளும் ஆயுதங்களாக உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. தீ வைத்தலும் உயிரைப் பலியெடுத்திருக்கின்றன. பெரியோர்களின் சண்டை சச்சரவுகளில் குழந்தைகளும் உயிர்ப்பலி கொடுத்திருக்கின்றன.

மூன்று சதவீதமானவை தான் முன்னரே திட்டமிட்டுச் செய்யப்பட்ட கொலைகளாம். இதில் கூலிக்குப் பிடித்த கொலைஞர்களே ஈடுபட்டனர்!

365 நாட்களில் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் அவச்சாவு!

எப்படி தார்மீக ஆட்சியை இங்கு கொண்டுவருவது?

0 0 0

யாழ்ப்பாணம் தபால் தந்தி அலுவலகத்தைச் சேர்ந்த 'லைன்ஸ்மன்' ஒருவர் பொலிஸ் நிலையத்துக்கு எதிரில் தொலைபேசிக் கம்பத்தில் ஏற்பட்ட பழுதைத் திருத்திக்கொண்டிருந்தாராம். வேலை முடிந்து தமது சைக்கிளைப் பார்த்த போது அதில் முக்கிய தஸ்தாவேஜுகளும் ஏடும் அடங்கிய பையைக் காணவில்லை! அதில் தங்கள் ஊழியர் சம்பந்தப்பட்ட முக்கிய தஸ்தாவேஜுகள்தானிருந்தனவாம்.

[4-ம் கலம் பார்க்க]

# அணு ஆயுத சோதனை பூரணத்தடை: இந்திய ஆதரவை கேட்கிறார் கார்ட்டர்

புதுடில்லி, ஜன. 3

"உலகில் அணுசோதனைகளை முற்றாகத் தடைசெய்வதற்கு இந்தியா ஆதரவு வழங்க வேண்டும்"

இவ்வாறு இந்தியவிஜயத்தை மேற்கொண்டுள்ள அமெரிக்க அதிபர் திரு ஜிம்மி கார்ட்டர் இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாயிடம் கேட்டுள்ளார்.

அணுசோதனைகளை முற்றாகத் தடைசெய்வதற்கு பிரிட்டன் ஆதரவு அளித்துள்ளதாகவும் தெரிவித்த திரு. கார்ட்டர் இதற்கு சில பிரான்ஸ் ஆகிய நாடுகளின் ஆதரவைத் திரட்ட தாம் முயன்று வருவதாகவும் திரு. மொரார்ஜியிடம் தெரிவித்தார். (இ)

## "இந்திய மண்ணில் மகத்தான அனுபவம்"

புதுடில்லி, ஜன 3

"இந்தியாவில் தாம் தங்கியிருக்கும் இவ்வேளையில் அந்நிய மண்ணில் இருப்பது போன்ற உணர்வே தமக்கு ஏற்படவில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் தெரிவித்துள்ளார்.

இந்திய ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டி நேற்று அளித்த விசேட விருந்தின் போதே திரு கார்ட்டர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய மண்ணில் தமக்கு மகத்தான அனுபவம் ஏற்பட்டதாகவும் திரு. கார்ட்டர் தெரிவித்தார். (இ)

## மொரார்ஜிக்கு கார்ட்டர் அழைப்பு

புதுடில்லி, ஜன. 3

அமெரிக்காவுக்கு விஜயம் செய்யுமாறு இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய்க்கு அமெரிக்க அதிபர் திரு ஜிம்மி கார்ட்டர் அழைப்பு விடுத்துள்ளார்...

திரு. கார்ட்டரின் இந்த அழைப்பை திரு தேசாய் ஏற்றுக்கொண்டுள்ளார். (இ)

## ஜெ. பி. க்கு கார்ட்டர் நன்றி

புதுடில்லி, ஜன. 3

தமது இந்திய விஜயத்தை வரவேற்று தமக்கு வாழ்த்துத் தந்தி ஒன்றை அனுப்பியமைக்காக திரு. ஜிம்மி கார்ட்டர். திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணுக்கு தொலைபேசி மூலம் நன்றி தெரிவித்துள்ளார்.

திரு. ஜெயப்பிரகாஷர் சுகவீனமுற்றிருப்பதால் திரு. கார்ட்டர் அவருடன் தொலைபேசியில் உரையாடமுடியவில்லை.

திரு. ஜெயப்பிரகாஷரைத் தம்மால்சந்திக்கமுடியாமைக்கு தாம் வருந்துவதாகவும் திரு. கார்ட்டர் திரு ஜெயப்பிரகாஷரின் உதவியாளரிடம் தெரிவித்தார். (இ)

## ஸ்ரீமந் நாராயண் மறைவு

புதுடில்லி, ஜன. 3

காந்தியவாதியும் சர்வோதயத் தலைவருமான திரு. ஸ்ரீமந் நாராயண் நேற்று தமது 65வது வயதில் காலமானார்.

சிறந்த கல்விமானும் பொருளாதார நிபுணருமான இவர் நேபாளத்தில் முன்னர் இந்தியத் தூதுவராகவும் இருந்து வந்தார். (இ)

......

## சட்டசபையில் துண்டுப்பிரசுரம் வீசினராம்

சென்னை, ஜன. 3

தமிழ்நாடு சட்டசபை பார்வையாளர் கலரியில் இருந்து துண்டுப்பிரசுரங்களை சபையில் வீசிய வாலிபர் ஒருவருக்கு சட்டசபை 7 நாள் சிறைத்தண்டனை விதித்தது

சபையை அவமதித்ததாக அந்நபர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது. (இ)

# பாலஸ்தீனர்களின் சுயநிர்ணய உரிமை; இஸ்ரேல் அங்கீகரிக்கவேண்டும்

## அமெரிக்கா வலியுறுத்தட்டும் என்கிறார் சதாத்

கெய்ரோ, ஜன. 3

பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும் என்று இஸ்ரேலை வலியுறுத்துமாறு அமெரிக்காவிடம் எகிப்திய அதிபர் ஜனாப் அன்வர் சதாத் கோரிக்கை விடுத்துள்ளார்.

டெலிவிஷன் நிருபருக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே ஜனாப் சதாத் தமது கோரிக்கை பற்றிய தகவலைத் தெரிவித்தார்.

மத்திய கிழக்கு அமைதிக்கு பாலஸ்தீன மக்களின் பிரச்னையே தடையாக உள்ளது எனவே இப்பிரச்னை உடனடியாகத் தீர்க்கப்படவேண்டும் என்றும் அவர் கூறினார்.

இஸ்ரேலிய-எகிப்திய உறவு பற்றி ஜனாப் சதாத் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

இஸ் ரேலியப் பிரதமருடனும் அதிகாரிகளுடனும் அமைதிப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றபோதிலும், கைப்பற்றப்பட்ட அரபு பிரதேசங்களில் இருந்து இஸ்ரேலியர்கள் வெளியேறவேண்டும் என்ற கொள்கையிலிருந்து எகிப்து இம்மியளவும் அசையமாட்டாது.

கைப்பற்றப்பட்ட அரபு பிரதேசங்களிலிருந்து இஸ்ரேலியர்கள் வெளியேறியபின் மத்திய கிழக்கில் நிரந்தர அமைதி சாத்தியமாகும் என்றும் ஜனாப் சதாத் வலியுறுத்தினார். (இ)

## "எமது அரசு தவறிவிட்டது"

[சுன்னாகம்]

"தமிழுக்காகத் தம்மை அர்ப்பணித்து பலமொழிகளில் பாண்டித்தியம் பெற்று மேலைநாடுகளிலும் புகழீட்டிய சுவாமி ஞானப்பிரகாசருக்கு அவர் வாழ்ந்தபோதே ஜேர்மனி அரசு முத்திரை வெளியிட்டுக் கௌரவித்தது ஆனால் அவர் பிறந்தநாட்டில் அவருக்கு முத்திரை வெளியிடு செய்ய அரசு தவறிவிட்டது. மல்லாகம் சுவாமி ஞானப்பிரகாசர் இளைஞர் மன்றத்தினர் அவரது உருவம் பதித்த நாட்காட்டியை வெளியீடு செய்வது மிகவும் பாராட்டுக்குரியது" என்று மல்லாகம் சுவாமி ஞானப்பிரகாசர் கலையரங்கில் நடைபெற்ற கிறிஸ்மஸ் பஜனை நிகழ்ச்சியிலும், சுவாமி ஞானப்பிரகாசர் இளைஞர் மன்றத்தின் நாட்காட்டி வெளியீட்டிலும் தலைமை வகித்துப் பேசிய மன்றத்தலைவர் மா. ரவிச்சந்திரா கூறினார்.

செயலாளர் செ. சேகரன் நன்றிதெரிவித்துப் பேசினார். தேநீர் விருந்தும் நடைபெற்றது.

## தமிழ்நாடு பயணம்

(யாழ்ப்பாணம்)

நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ பரமாச்சார்ய சுவாமிகளின் பிரதம சிஷ்யன் கானவாரிதி சிவ. வை. நித்தியானந்தசர்மா இன்று தமிழ்நாடு பயணமாகிறார்.

தமிழ்நாடு தருமை ஆதீனத்தின் முதல்வர் ஸ்ரீலஸ்ரீ தருமைக்குருமணியின் விசேஷ அழைப்பை ஏற்றுச் செல்லும் இவர் தமிழ்நாட்டில் தருமபுரம், மதுரை, பழனி, சிதம்பரம், கரூர், சுவாமிமலை, கோவை, சென்னை முதலிய இடங்களில் இன்னிசை விரிவுரைகள் நிகழ்த்துவார்.

மூளாயில் பிறந்து ஊரெழுவை வசிப்பிடமாகக் கொண்ட இவர் பல ஆண்டுகளாக நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளிடம் இன்னிசை விரிவுரை பயின்றார். மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் இவர் இன்னிசை விரிவுரைகள் நிகழ்த்தியுள்ளார்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

கரணவாய் இரட்டைக்கொலை:

# "கந்தசாமி வெட்டியதும் கணவரும் அவரும் கட்டிப் புரண்டனர்"

## மரணவிசாரணையில் மனைவி சாட்சியம்

(நெல்லியடி)

"கந்தசாமி ஓடிவந்து கத்தியால் என் கணவரது நெற்றியிலும், கையிலும் வெட்டினார். கணவன் வெட்டு வாங்கியவுடன் கந்தசாமியைக் கட்டிப் பிடித்தார். இருவரும் உருண்டு புரண்டனர் இருவரது உடம்பிலிருந்தும் ரத்தம் வழிந்தது"

இவ்வாறு கரணவாய் இரட்டைக் கொலை சம்பந்தமான விசாரணையில் காலஞ்சென்ற இராசலிங்கம் (தொலைத் தம்பி) என்பவரின் இரண்டாவது மனைவி எனக் கூறப்படும் பூமணிதேவி (வயது 29 என்பவர் சாட்சியமளிக்கையில் கூறினார்.

வடமராட்சி [illegible] மரணவிசாரணை அதிகாரி திரு. எம். வி. பு[illegible]த்திரன் முன்னிலையில் மரணவிசாரணை நடைபெற்றது.

இச்சம்பவத்தில் கந்தசாமி, இராசலிங்கம் என்னும் இருவர் மரணமாகினர் என்பது தெரிந்ததே

பூமணிதேவி தமது சாட்சியத்தில் கூறியதாவது: "இறந்தவரை பத்து வருடங்களுக்கு முன் திருமணம் செய்தேன். ஐமக்கள் [illegible] ஆண்பிள்ளைகள் உண்டு என் கணவரின் மூத்த தாரம் 13 வருடங்களுக்கு முன்பே இறந்துவிட்டார்.

### அன்று மாலை

சம்பவம் நடந்த தினத்தன்று மாலை 6-30 மணியளவில் என் மகனும் நானும் இறந்தவரின் மூத்த மனைவியின் வீட்டிற்குப் போனோம். அந்தவீட்டில் இறந்தவரின் முதல் மனைவியுடைய சகோதரர் இராசையாவே அவ்வீட்டில் இருக்கிறார் அவ் வீட்டிலிருந்து அவரை வெளியேறுமாறு நாம் கேட்டோம். அவரும் ஓரிரு தினங்களில் முடிவு சொல்வதாகக் கூறினார் நாம் அந்த வீட்டில் குடியேறுவதற்காகத்தான் அவரை வெளியேறுமாறு கேட்டோம்.

### சிவலிங்கம் தாக்கினார்

அன்று இராசையா வீட்டில் இருந்து திரும்பி எமது வீடு நோக்கி வந்தோம் வீதியில் வைத்து அப்போது பொன்னையா சிவலிங்கம் என்பவர் [illegible] தடியால் தாக்கினார்.

சிவலிங்கம் அடித்ததும் அவர் ஐயோ என்று கத்தியபடி கீழே விழுந்தார். சிவலிங்கம் ஓடிவிட்டார்.

### கந்தசாமி வந்தார்

அப்போது இறந்த கந்தசாமி ஓடிவந்து கணவரின் நெற்றியிலும் கையிலும் கத்தியால் வெட்டினார்.

வெட்டு விழுந்ததும் கணவர் கந்தசாமியைக் கட்டிப் பிடித்தார். இருவரும் உருண்டுபுரண்டனர். நான் ஐயோ, ஐயோ என்று அலறினேன்.

இருவரையும் பிரிக்க முயற்சித்தேன். முடியவில்லை பின்னர் தாமாகவே இருவரும் விடுபட்டு நிலத்தில் கிடந்தனர் நான் கந்தசாமிக்குப்பக்கத்தில் போகவில்லை. அவர் அனுங்கியவாறு கிடந்தார்.

மடியில் வைத்திருந்தேன்

நான் பரமசாமி என்பவரது வீட்டிற்குப்போய் லாம்பு வாங்கிவந்து கணவரை 25 யார் தூரம்வரை கொண்டுசென்றேன். மதகு ஒன்றுக்கு அருகில் அவரை மடியில் வைத்திருந்தேன் எனது சேலையால் அவரது உடம்பிலிருந்து வழிந்த இரத்தத்தைத் துடைத்தேன்.

[5-ம் பக்கம் பார்க்க]

## பாடசாலைக்கு புதியகட்டடம

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு திருநாவுக்கரசு வித்தியாசாலையை இடம் மாற்றி, புதிய காணியில் தற்காலிகமாக அமைக்க, வடபிரதேச கல்விப்பணிப்பாளர் அங்கீகாரம் வழங்கியுள்ளார்

ஊரதீவு சனசமூக நிலையத்தினால் அன்பளிப்பாக வழங்கிய காணியில் இக் கட்டடம் தற்காலிகமாக அமைக்கப்படும்.

பாடசாலைகள் ஆரம்பதினமான 9ம் திகதிக்கு முன்னர், தற்காலிக கட்டடத்தை அமைக்கும் பணிகளில் ஊரதீவு சனசமூகநிலைய உறுப்பினர்களும், அதிபரும் ஈடுபட்டு வருகின்றனர் கட்டடத் திறப்புவிழா இம்மாதம் 9ந் திகதி நடைபெறும். [செ]

உங்கள் உற்பத்திப் பொருட்களை விற்கவேண்டுமா?
உங்களுக்குத் தேவையான பாவனைப் பொருட்களை வாங்கவேண்டுமா?
இன்றே விஜயஞ் செய்யுங்கள்
எஸ். பி. சாமி அண் கொம்பனி
72, 4ம் குறுக்குத் தெரு — கொழும்பு-11
193, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்!

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி: 2-30, 6-30, 9-30
சிவாஜி-விஜயா
**ராமன் எத்தனை ராமனடி**

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி பி.ப. 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
எம்.ஜி.ஆர்-லதா
**உழைக்கும் கரங்கள்**

**Regal** (Jaffna)
Daily at 4-30, 7-00 & 9-30 p. m.
TOSHIRD MISUNE
in
**RED BEARD**
(cinimas scope)

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-ஜெய்கணேஷ்
**மூத்தான முத்தல்லவோ**

**லிடோ** எம். ஜி. ஆர். — லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ். நகர்) போன்: 7693
**நீதிக்கு தலைவணங்கு**

**மனோஹரா** (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி- ஜெமினி - லக்ஷ்மி - நிர்மலா
**உனக்காக நான்**
(ஈஸ்ட்மன் கலர்)

**வின்ஸர்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்,விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
**மூன்று முடிச்சு**
திரைக்கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

**சாந்தி** (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினி... விஜயா... நாகேஷ்... மனோரமா...
சோ...
**தேன் மழை** (புதிய பிரதி)

**ஸ்ரீதர்** தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
முத்துராமன், ஜெயசித்திரா, சுந்தரராஜன், ஸ்ரீகாந்த்
**இன்ஸ்பெக்டர் மனைவி**
டைரக்ஷன் A. C. திருலோகசந்தர் M. A.

கடைசி இரு தினங்கள்
**ராணி** தினசரி 10-30, 2.30, 6-00, 9.30.
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர்.-விஜயா, நாகேஷ் நடித்த
**வி வ சா யி**
(புதிய பிரதி)

யாழ்.மாவட்டத்தில் **ராஜா** திரையரங்கில்மட்டும்
எல்லாக்காட்சிகளுக்கும்
தமிழ்த்தலைவர் அமரர் தந்தை செல்வாவின்
இறுதியாத்திரைக்காட்சி காண்பிக்கப்படும்.
எஸ். வீ. ஆர். பிலிம்ஸ் வெளியீடு
தினசரி காட்சி நேரங்கள்:
10-15, 2-00, 6-00, 9-45
ஜெமினி - கே. ஆர். விஜயா
சீர்காழி கோவிந்தராஜன் - விஜயகுமாரி
நடித்த
P. V. C. தயாரிப்பு
**தசாவதாரம்**
(கலர்)
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்;
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்


## வீதி சீர்கேடு

[வவுனியா]

கிளிநொச்சியிலிருந்து இராமநாதபுரம் செல்லும் வீதி மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. இப்பாதை சீரான முறையில் இல்லாததால் 10 நிமிடத்தில் போகவேண்டிய இடத்திற்குச்செல்ல அரைமணி நேரம் எடுப்பதாகப் பிரயாணி ஒருவர் தெரிவித்தார். [அ]

• • •

## இடமாற்றங்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பாடசாலைகளின் வைத்திய அதிகாரியாக 6 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய டாக்டர் திருமதி அருளம்பலம் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பொதுசுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. சா. அரிநேசலிங்கம் சிலாபத்திற்கு இடமாற்றலாகியுள்ளார். [உ]

• • •

## சந்தேக நபர்கள் சரண்

(பண்டத்தரிப்பு)

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த நபர் ஒருவரைத்தாக்கிப் படுகாயம் விளைவித்ததாக சுன்னாகம் பொலிசாரால் தேடப்பட்டுவந்த இரு சந்தேக நபர்களும் மல்லாகம்மாவட்ட நீதிபதி திரு எம் டி. யேசுரத்தினம் முன்னிலையில் சரணடைந்தனர்.

இவர்கள் இருவரையும் இன்று புதன்கிழமை வரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த ஆண்டி செல்வத்துரை என்பவரை தாக்கிப் படுகாயம் விளைவித்ததாக அதே இடத்தைச் சேர்ந்த வாலிபர்களான கந்தன் சிவலிங்கம், முத்தையா செல்வராசா ஆகிய இருவரையும் சுன்னாகம் பொலிசார் சந்தேகத்தின் பேரில் தேடிய போது இருவரும் தலைமறைவாகிவிட்டனர்.

இவர்கள் சட்டத்தரணி திரு மு திருநாவுக்கரசு மூலம் திங்கட்கிழமை மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் சரணடைந்தனர்.

தாக்குதலுக்குள்ளான ஆண்டி செல்லத்துரை என்பவர் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் திரு ரி தாமோதரம்பிள்ளை தொடர்ந்து விசாரணையில் ஈடுபட்டுவருகின்றார். (உ)

## கந்சாமி...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

அப்போது அவர் மயங்கியநிலையில் இருந்தார். பின் ஆஸ்பத்திரியில் கணவர் காலமானார்'' இறந்தகந்தசாமிக்கும் என் கணவருக்கும் கோபம் கிடையாது. இராசையா விடயமாகவே கோபம் ஏற்பட்டது.

விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (உ)


**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 4-30, 7-00, 9-30.
LONDON CONSIPIRACY

**RIO** (Jaffna)
Daily 4-45, 7-00, 9-30p.m.
**HENNESSY**


இந்திரா ஆதரவாளர்

# கார்ட்டருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, ஜன. 3

இந்திய முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் ஆதரவாளர்கள் நேற்று புதுடில்லியில் அமெரிக்க அதிபர் ஜிம்மி கார்ட்டருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்திய வெளிநாட்டு அமைச்சர் திரு. ஏ. பி. வாஜ்பாய் இந்த ஆர்ப்பாட்டத்தை வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்காக திருமதி காந்தி திரு. கார்ட்டரிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்றும் திரு. வாஜ்பாய் தெரிவித்தார். [இ]

''பொலிஸ் வாக்கு மூலம்

# சட்டத்தரணிகளுக்கு தமிழில் வழங்கவேண்டும்''

(யாழ்ப்பாணம்)

சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜராகி, நீதிபதியின் உத்தரவின்றி அவர்களை வாக்குமூலம் எடுப்பதற்காக பொலிஸ் விசாரணைக்கோ, வேறு எங்கோ அழைத்துச் செல்லும் பொலிசாரின் நடவடிக்கையில் மாற்றம் கொண்டுவரவேண்டுமென இலங்கை வழக்கறிஞர் சங்க உபதலைவர் சட்டத்தரணி ஏ. அன்ரனி கொழும்பில் நடைபெற்ற நீதிபதிகள், சட்டத்தரணிகள் மாநாட்டில் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: வழக்குகளை தமிழில் நடாத்துவதற்கும் சந்தேக நபர்கள் கொடுத்த வாக்கு மூலம் சரியான முறையில் இருப்பதற்கும் முறைப்பாடுகள் சிங்கள மொழியில் எழுதப்பட்டிருந்தாலும் பொலிசார் தமிழ் மொழிபெயர்ப்பு வழங்கவேண்டும். அப்படி வழங்கினால்தான் சட்டத்தரணிகள் நீதியான முறையில் வழக்காடமுடியும்.

எந்த இடத்தில் கொலைச் சம்பவம் நடைபெற்றாலும் பொலிசார் மரணவிசாரணை அதிகாரிகள் அளிக்கும் தீர்ப்பை பிழையென மீண்டும் பொலிசார் அவர்களிடம் செல்லக்கூடாது. அப்படியாயின் நீதிபதியின் உத்தரவின்பேரிலே நடைபெறவேண்டும். பின்னர் நீதிபதியே விசாரணையை நடாத்தவேண்டும்.

இவையனைத்தும் பரிசீலனை செய்யப்படும் என நீதிஅமைச்சர் கே. டபிள்யு. தேவநாயகம் தெரிவித்தார்.

இம் மாநாட்டுக்கு யாழ் சட்டத்தரணிகளின் சார்பில் திருவாளர்கள் கே வி எஸ் சண்முகநாதனும் வி வி சோமசேகரும் கலந்துகொண்டனர். [கெ]

## தெய்வாதீனமாக தப்பினர்

(பூநகரி)

இசங்குப்பிட்டியிலிருந்து பூநகரி நோக்கி வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று தந்திக்கம்பம்ஒன்றுடன் பலமாக மோதியது.

எனினும் மோட்டார் சைக்கிளில் வந்தவர் எவ்வித காயமும் இன்றி தெய்வாதீனமாக உயிர் தப்பினர். (உ)

......

## முறைப்பாடு இல்லையாம்

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் எந்தக் கிளையிலாவது ஒரு பொருளும் தங்களுக்குக் கிடைக்கவில்லையெனப் பொதுமக்கள் தமக்கு முறைப்பாடு செய்யவில்லையென சங்கப் பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்குவதும் சைவாலயம் ஒன்றுக்குச் சமீபமாக உள்ளதுமான கூட்டுறவுச்சங்கம் ஒன்றில் பங்கீட்டுப் பொருட்கள் விநியோகத்தில் சீர்கேடு நிலவுவதாக 2-1-78 ஈழநாடு இதழில் வெளியான செய்தி தவறானதென்றும் அவர் அறிவித்துள்ளார். இத்தவறுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

## பொலிஸ் அதிகாரியின் முதல் நடவடிக்கை


[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இன்ஸ்பெக்டர் திரு. ரி தாமோதரம்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் தமதுபொறுப்பை ஏற்றுக்கொண்டதும் தமது முதல் நடவடிக்கையாக சுன்னாகம் பொலிஸ் பகுதியில் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் நிலைநாட்டும் வகையில் பஸ் நிலையங்கள், சந்திகள், வீதிகளில் அனாவசியமாக நின்று வம்பளக்கும் வாலிபக் கோஷ்டிகளை விரட்டினார்.

மதுபோதையில் கலாட்டா புரிந்த வாலிபர்களும் கடுமையாக எச்சரிக்கப்பட்டனர். (உ)

## ஓய்வு பெறுகிறார்



[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இசைத் தமிழ் ஆசிரியராக 34வருடங்கள் தொடர்ந்து கடமையாற்றிய திரு. தா. பொன்னம்பலம் இம்மாதம் தொடக்கம் தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

ஈழத்திலுள்ள பல்வேறு மன்றங்களின் பாராட்டுகளைப் பெற்ற இவர் கதாகால சேஷமணி முத்தமிழ்வித்தகர் சிவகாமரத்தினம் பிரசங்காத்திஞகரம் முதலான பட்டங்களையும் பெற்றுள்ளார்.

கவிதைபுனைதல்' நடாகம் எழுதல்; திருக்குறள்மனனம் செய்தல், கதாப் பிரசங்கம் செய்தல் ஆகிய துறைகளில் நடாத்தப்பட்ட போட்டிகள் பலவற்றில் பங்குபற்றி தங்கப் பதக்கங்களை பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இவர் விரைவில் மலேசியா சென்று சமய விரிவுரைகள் நிகழ்த்த விருக்கின்றார். [அ]

## ஒளிவிழா

(மன்னார்)

பனங்கட்டிக்கொட்டு புனித குசையப்பர் கழக ஆதரவில் கிறிஸ்மஸ் ஒளிவிழா புனித செபஸ்தியார் ஆலய மைதானத்தில் நடைபெற்றது புனித செபஸ்தியார் உதவிப் பங்குத் தந்தையால் ஒளிவிழாவின் மகிமை பற்றி சிறப்புரை நிகழ்த்தினர்.

# "திரைப்படங்கள் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்துகிறது!"

## சென்னை திரைப்பட விழாவில் தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்.

சென்னை, ஜன. 3

"திரைப்படங்கள்; மக்களுக்கு மகிழ்ச்சியையும்; பொழுதுபோக்கையும் மட்டும் வழங்கவில்லை. நல்ல கருத்துக்களைத் தெரிவிப்பதன்மூலம், சமுதாய மாற்றத்தையும் திரைப்படங்கள் ஏற்படுத்துகின்றன" என்று சென்னையில் இன்று ஆரம்பமான சர்வதேச திரைப்பட விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கூறினர்

இத்திரைப்பட விழாவை மத்திய ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. எல். கே. அட்வாணி ஆரம்பித்துவைத்தார்.

### தயாரிப்பாளர் பொறுப்பு

இன்று மாலை ஆரம்பமான இவ்விழாவில் அமைச்சர் திரு எல். கே. அட்வாணி தமது உரையில் கூறியதாவது:

"திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு முக்கிய பொறுப்புகள் உண்டு. மக்கள் மத்தியில் சிறந்த கருத்துக்களை வெளியிட்டு, சமூகப்பொறுப்புக்களை அவர்கள் உணரச்செய்வதில், திரைப்படங்கள் உதவவேண்டும் இந்த முக்கிய கடமைகளைத் திரைப்படத்தயாரிப்பாளர்கள் உணரவேண்டும்.'

### கல்வி அறிவற்ற மக்களுக்கு...

"இந்தியாவின் பெரும்பான்மை மக்கள், கல்வி அறிவு அற்றவர்கள். இவர்கள் மத்தியில் அறிவை வளர்க்க திரைப்படங்கள் துணை நிற்கவேண்டும். கல்வி அறிவற்றவர்ளுக்கு சிறந்த கருத்துக்களை திரைப்படங்கள் ஊட்டவேண்டும்" என்று மத்திய ஒலிபரப்புத் துறை அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

### எம். ஜி. ஆர். பேச்சு

இதனைத் தொடர்ந்து, திரைப்படவிழாவுக்கு தலைமை வகித்த தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் பேசுகையில், திரைப்படங்கள் பெரும் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்துகின்றன என்று குறிப்பிட்டார்.

### நாடகக்கலை

"தமிழ் நாட்டில், திரைப்படங்கள் தலைதூக்குவதற்கு முன்னர், நாடகக்கலை சிறந்து விளங்கியது. நாடகங்கள் மூலம் பாமரமக்களுக்கு அறிவூட்டப்பட்டது" என்று குறிப்பிட்ட தமிழக முதல்வர் மேலும் கூறியதாவது;

### திரைப் படங்கள் மூலமாக...

"காலஞ்சென்ற பேரறிஞர் அண்ணா, நகைச்சுவை மன்னன் என். எஸ். கிருஷ்ணன் போன்றவர்கள் திரைப்படங்களில் நல்ல கருத்துக்களைப் புகுத்தி, மக்கள் மத்தியில் ஒரு விழிப்பை ஏற்படுத்தினர். இதன் மூலம் சமுதாய மாற்றத்துக்கு அவர்கள் பெரிதும் உதவினர். திரைப் படங்கள், மக்களின் வெறும் பொழுது போக்குச் சாதனங்களாக மட்டும் விளங்குவதில்லை. மக்கள் மத்தியில் நல்ல கருத்துக்களை வெளிப்படுத்தும் சாதனங்களாக விளங்குகின்றன" என்று தமிழக முதல்வர் குறிப்பிட்டார்.

திரு. கட்டாரா வரவேற்புரை நிகழ்த்தினர்.

## வெற்றியை நோக்கி இந்தியா

மெல்போண், ஜன.. 3

இந்திய - ஆஸ்திரேலிய 3-வது கிரிக்கட் டெஸ்டில் இந்தியக்கோஷ்டி வெற்றி பெறுவது உறுதியாகிவிட்டது.

மழை, புயல் போன்ற இயற்கைத் தடைகள் ஏற்பட்டால் அன்றி இந்தியாவுக்கே வெற்றி நிச்சயம்.

நான்காவது நாளான இன்று 4 விக்கட்டுகளை இழந்து 234 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை ஆரம்பித்த இந்தியா 343 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுகளையும் இழந்தது. கவஸ்கர் 118 ஓட்டங்களையும் மொகிந்தர் அமர்நாத் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

அடுத்து துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய கோஷ்டியினர் இந்திய சுழல் பந்து வீச்சாளர்களின் பந்துகளை சமாளிக்க முடியாது அடுத்தடுத்து 8 விக்கட்டுகளை இழந்து விட்டனர். ஆட்டநேர முடிவில் ஆஸ்திரேலியா 8 விக்கட்டுகளை இழந்து 123 ஓட்டங்களைப்பெற்றது.

சந்திரசேகர் 28 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கட்டுகளைக் கைப்பற்றினர். பேடி 3 விக்கட்டுகளைக் கைப்பற்றினர். (இ)

## 168 கட்டிடப் பொருட்கள் விற்பனை நிலையம்

(கொழும்பு)

168 தேர்தல் தொகுதிகளிலும் 168 கட்டிடப் பொருள் விற்பனை நிலையங்களை திறக்க கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் முடிவுசெய்துள்ளது.

பொதுமக்கள் கட்டிடப் பொருட்களை இலகுவில் பெறக்கூடிய விதத்திலேயே இந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. (இ)


'ஈழநாடு' தினக்குறிப்பு 1978

விற்பனையாகின்றது

விலை:- ரூபா 4-50 சதம்

வியாபாரிகளுக்கு கழிவுண்டு.

தொடர்பு கொள்ளவும்:-

கலாநிலையப் பதிப்பகம்

303. கே. கே.எஸ். வீதி — யாழ்ப்பாணம்

தொலைபேசி: 7707

எஸ். கிருஷ்ணசாமி

(மார்க்கட்)

பெரியகடை — யாழ்ப்பாணம்



இப்பத்திரிகை "ஈழநாடு. லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கிவுன்ஸோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The EelanaaduPost Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.


## தர்மப்பணத்திலும் மோசடி?

[யாழ்ப்பாணம்)

சமூக சேவைப்பகுதியினரால் சட்டதிட்டங்களுக்கு அமைய ஏழைகளுக்கு வழங்கப்படும் தர்மப்பணம் சில ஏமாற்றுப் பேர்வழிகளால் தட்டிப் பறிக்கப்படுவதாகப் புகார்கிடைத்துள்ளது.

தங்களின் சிபார்சின் பேரிலேயே அப்பணம் கிடைப்பதாகச் சிலர் கூறி ஏழைகளிடம் பணம் பெற்றுவருவதாக அப்புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக எவருக்கும் பணம் கொடுக்கத்தேவையில்லையென யாழ் 'சமூக சேவைப்பகுதி அத்தியட்சகர் திரு கெங்காதரன் அறிவித்துள்ளார்.

யாராவது வற்புறுத் திப் பணம் கேட்டால். ரகசியமாகத் தமக்குத் தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க-அ)

## 'ஐ. தே. க. பட்ஜட் ஏழைத் தொழிலாளரை பாதிக்கும்'

[யாழ்ப்பாணம்]

"ஐக்கிய தேசியக்கட்சியின் முதலாவது வரவு செலவுத் திட்டம் குறிப்பாக இந்நாட்டு ஏழைத் தொழிலாளர் விவசாயிகளையும் மற்றும் கீழ் நடுத்தர அரசாங்க ஊழியர்களையும் மிகக் கடுமையாகப் பாதிக்கும் வகையில் இந் நாட்டின் நாணயத்தின் பெறுமதி குறைக்கப்பட்டுள்ளதுடன் சுதந்திரவர்த்தக வலயம் என்ற போர்வையில் அன்னிய ஏகபோக முதலாளிகளுக்கும் அவர்களின் மூலதனத்திற்கும் மாத்திரம் சுதந்திரம் கொடுக்கும் வகையில் நாட்டின் அடிப்படை சட்டங்களே மாற்றியமைக்கப் பட்டிருக்கின்றன." என்று திரு. வி. ஏ. சந்தசாமி வேலணை கிழக்கு தேவிக் கோட்டம் ஜனசமூக நிலைய முன்றலில் நிலையத்தலைவர் திரு. பொ. சிவசுந்தரத்தின் தலைமையில் நடைபெற்ற இளைஞர்களுக்கான கருத்தரங்கில் பேசுகையில் கூறினர்

அவர் மேலும் பேசுகையில் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் செய்யத்திட்டமிட்டு இருந்ததை இப்போது தான் தம்மை சர்வாதிகாரமும் கொண்ட ஜனதிபதி நிலைக்கு 'உயர்த்துவதன் மூலம் செய்யத்திட்டமிட்டு அதை நடைமுறையிலும் இவ் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் காட்டிவிட்டார்." என்றார்.

இக் கருத்தரங்கில் திரு. பி. முத்துலிங்கம் திரு. முத்துத் தம்பி ஆகியோர் உட்பட பலர் உரைஆற்றினர்கள்.

### கார்ட்டர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ருடன் கூட்டறிக்கையொன்றில் கைச்சாத்திட்டார். இன்று மாலையே அவர் சவூதி அரேபியாவுக்குப் பயணமானர் இதற்கிடையே எகிப்திய ஜனதிபதி அன்வர் சதாத்தை அஸ்வானில் சந்திக்க, கார்ட்டர் ஏற்பாடுகளைச் செய்திருப்பதாக வாஷிங்டனிலிருந்து வெளியான செய்திகள் தெரிவிக்கின்றன.

"சர்வதேச அமைதிக்கு, நாடுகளில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகள் அகற்றப்படவேண்டும். நியாயமான பொருளாதார முறைமை ஏற்படுத்தப்படவேண்டும்" என்று இந்திய அமெரிக்கத் தலைவர்களின் கூட்டறிக்கையில் தெரிவிக்கிறது'

### காணவில்லை

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த செல்வன் நடராசா கிறிதரன் கடந்த சனிக்கிழமை முதல் காணவில்லை. இவர் கடைசியாக வெள்ளைச்சேட்டும், சாம்பல்நிற அரைக்காற்சட்டையும் அணிந்திருந்தார். 5 அடி உயரமுடையவர். பொதுநிறம், இவரைக்காணுது தாய், தந்தையர் சகோதரர்கள் கவலையடைந்துள்ளார். இவர் எங்கிருந்தாலும், கீழ்க்கண்ட விலாசத்துக்கு தகவல் கொடுக்கவும். தகவல்: அப்புக்குட்டி நடராசா, மாவிட்டபுரம்.

8098

### வெளிநாட்டு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வர்த்தக வங்கியிலும்] ஆரம்பிக்க விரும்பும் ஒருவர், சேமிப்பு முறையிலோ அல்லது நிரந்தர வைப்புக் கணக்கிலோ அல்லது கூட்டுக் கணக்கிலோ ஆரம்பிக்கலாம்.

நிதியமைச்சர் வழங்கியிருக்கும் இப்புதிய சலுகைக்கு எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லையென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மரண அறிவித்தல்

### திருமதி பாமதி தனபாலசுந்தரம்

டாக்டர் ஆர் எஸ். தனபாலசுந்தரத்தின் அன்பு மனைவியும், சுரேந்திரா, சுமங்களா, சுதர்மன் ஆகியோரின் அன்புத் தாயாரும், புலோலியைச் சேர்ந்த இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. என் சிவஞானசுந்தரம், திருமதி சிவஞானசுந்தரத்தின் ஏகபுத்திரியுமான திருமதி பாமதி தனபாலசுந்தரம், செவ்வாய் அதிகாலை இறைவனடி எய்திவிட்டார். அன்னரின் ஈமக்கிரியைகள் இன்று மாலை [புதன்கிழமை] 4 மணியளவில் கனத்தையில் நடைபெறும். 100/4, ஹோட்டன் பிளேஸ், கொழும்பு-7. தகவல்: டாக்டர் ஆர். எஸ். தனபாலசுந்தரம்.

8097